மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இந்த நெல் உலர்த்தும் இயந்திரம் ஒன்றை நிறுவுவதற்கு ரூ. 2,91,000 செலவாகிறது. மொத்தம் ரூ. 87,32,000 செலவானது. ஒரு நாளைக்கு 160 டன் நெல் உலர்த்தலாம்.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அமைத்துள்ளதைப் போல நெல் உலர்த்தும் இயந்திரத்தை மதுரை மாவட்டத்திலும் ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மதுரைக்கு அது தேவையில்லை. தஞ்சையைப் பொறுத்தவரையில் குறுவை அறுவடை சமயத்தில் ஈரம் தாக்கிறது என்ற காரணத்தால், அந்த ஈரத்தை உலர்த்தி உடனடியாக மற்ற இடங்களுக்கு அனுப்ப வேண்டியிருப்பதால் நெல் ஈரத்தால் முளைத்துவிடாமல் பாதுகாப்பதற்காகத்தான் தஞ்சையில் அது வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. வி. தேவராஜ முதலியார்: வட ஆற்காடு மாவட்டம் தஞ்சைக்கு அடுத்தபடி நெல் உற்பத்தி செய்யப்படும் இடம். ஆகையால் அந்த மாவட்டத்தில் ஒரு உலர்த்தும் இயந்திரம் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இந்த நெல் உலர்த்தும் இயந்திரம் வட ஆற்காட்டிற்குத் தேவையில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்த இயந்திரத்தில் ஒரு நாளைக்கு 160 டன் தான் உலர்த்தமுடிகிறது. மாதத்திற்கு 4,500 டன், ஒரு வருஷத்திற்கு 50 ஆயிரம் டன் தான் உலர்த்த முடியும். ஆனால் தஞ்சையில் 8 லட்சம் டன்னுக்கு மேலாகக் கொள்முதல் செய்கிறோம். ஆகையால் 50 ஆயிரம் டன் நெல்லுக்காக ஒரு கோடி ரூபாய் செலவில் இயந்திரம் அமைக்க வேண்டுமா? அதனால் ஏற்படும் வட்டி நஷ்டம் எவ்வளவு என்பதை அரசு ஆராய்ந்ததா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இது இந்திய ஃபுட் கார்ப்பரேஷனால் அமைக்கப்படுவது. நாம் செய்வதல்ல. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ரூ. 2,91,000-த்தை ரூ. 1,91,000 என்று குறைத்துக் கணக்கிட்டார்கள். அதைக் கூட்டி கணக்குப் போட்டு மத்திய அரசுக்கு வேண்டுமானால் உறுப்பினர், ஆலோசனை சொல்லலாம்.

Hindi Pandits

* 138 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether any permanent Hindi Pandits employed in the Service Homes under the Women's Welfare Department, have been ousted from service consequent on the language policy of the Government; and

(*b*) if so, whether any alternative employment has been given to such affected teachers?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Correspondents of aided high schools

* 139 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether Correspondents of Aided High Schools have authority to interfere in the acadmic work and the internal administration of schools ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) & (இ) இயல்பாகத் தலையிடுவதில்லை. ஆனால், முறைகேடான செயல்கள் நிகழ்ந்து வருவதாகக் கவனிக்கப்படும்பொழுதும், பள்ளியின் வேலை புறக்கணிக்கப்படும்பொழுதும், பள்ளி ஒழுங்காகப் பேணிவரப் படுவதற்கும், பள்ளி ஏற்பு மானியம் நிபந்தனைகள் நிறைவேற்றப் படுவதற்கும், அவ்வப்போது முடிவு செய்யப்படுகிற ஒழுங்கு விதிகள் செயல்படுத்தப்படுவதற்கும் பொறுப்புள்ள பள்ளித் தொடர்பாளர் அவ்வாறு தலையிட்டுக் குறைகளை நீக்கலாம்.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே. அப்படி ஏதாவது தமிழ் நாட்டிலுள்ள பள்ளிகளில் நடந்து. அரசு தலையிட்டு, அந்த நிர்வாகஸ்தர்களை அப்பதவிப் பொறுப்பிலிருந்து நீக்குவதற்கு ஏற்பாடு செய்ததுண்டா? ஏதேனும் அப்படி நிகழ்ச்சிகள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தகவல் இல்லை.

Book published during World Tamil Conference

* 140 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the books and reports published by the Director of Tamil Development in his capacity as the Secretary-General of the World Tamil Conference at the cost of the conference;

(*b*) the price at which each of them was sold;

(*c*) the number of copies published in each; and

(*d*) the names of the persons to whom these were distributed free of cost?

உலகத் தமிழ் மாநாட்டு விழா மலர்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உலகத் தமிழ் மாநாட்டுச் செலவில் தமிழ் வளர்ச்சி இயக்குநரால் மாநாட்டு அமைப்புச் செயலாளர் என்னும் முறையில் என்னென்ன புத்தகங்கள், அறிக்கைகள் வெளியிடப் பட்டன?